RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023- 2025

மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-4 | இதழ்-95 | 12 ஏப்ரல் | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5







# பழநி பங்குனி உத்திரத்தை முன்னிட்டு பக்தர்கள் வெள்ளத்தில் மூழ்கிய மூன்றாம் படை வீடு

பழநி, ஏப்.12

பங்குனி உத்திரத்தை முன்னிட்டு, அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழநியில் அதிகாலை முதலே பக்தர்கள் குவிந்து வருகின்றனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உப கோயிலான திருஆவினன்குடி கோயிலில் பங்குனி உத்திர திருவிழா ஏப்.5 ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடந்து வருகிறது. விழா தொடங்குவதற்கு முன்கூட்டியே ஈரோடு மாவட்டம் கொடுமுடி காவிரி ஆற்றில் இருந்து பக்தர்கள் தீர்த்த காவடியுடன் வரத் தொடங்கினர். விழாவின் 6ம் நாளான நேற்று (ஏப்.10) மாலை திருக்கல்யாண உற்சவம் கோலாகலமாக நடைபெற்றது.

பங்குனி உத்திரத்தை முன்னிட்டு பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலில் அதிகாலை 4 மணிக்கு நடை திறக்கப்பட்டு, விஸ்ரூப தரிசனம், காலை 4.30 மணிக்கு விளா பூஜை நடைபெற்றது. சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது. பழநி மலைக்கோயில் மற்றும் பாராவேல் மண்டபம் முழுவதும் 2 டன்னுக்கு பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதிகாலை முதலே பக்தர்கள் பழநியில் குவிய தொடங்கினர்.

பழநி கிரிவல வீதிகள், சந்நிதி வீதி உட்பட பழநி முழுவதும் காவி மற்றும் பச்சை உடை அணிந்து வந்த பக்தர்கள் வெள்ளத்தில் பழநி தத்தளித்தது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை காவடி எடுத்து கிரிவல வீதிகளில் ஆடி வந்தனர். மலைக்கோயிலுக்கு செல்ல யானைப்பாதை ஒருவழிபாதையாக மாற்றப்பட்டது. மலையில் இருந்து கீழே இறங்கும் பக்தர்கள் படிப்பாதை வழியாக இறங்க அனுமதிக்கப்பட்டனர்.

விரைவு தரிசன கட்டண சீட்டுகளான ரூ.20 மற்றும் ரூ.200 ரத்து செய்யப்பட்டுள்ளதால், அனைவரும் இலவச தரிசனத்தில் சுவாமி தரிசனம் செய்தனர். சண்முகநதி, இடும்பன் குளத்தில் புனித நீராடும் பக்தர்கள் தண்ணீரில் மூழ்கி உயிரிழப்பதை தடுக்க ரப்பர் படகில் தீயணைப்பு வீரர்கள் ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். பக்தர்களின் வசதிக்காக அதிகாலை 2 மணி முதல் முடி காணிக்கை செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

கூட்டத்தில் தொலைந்து போன குழந்தைகள், பக்தர்களை எல்இடி திரையில் புகைப்படத்துடன் வெளியிட்டு அவர்களை குடும்பத்துடன் சேர்க்க, காவல் துறை சார்பில் பழநி மலைக்கோயில், கிரிவலப்பாதை, பேருந்து நிலையம் உட்பட 7 இடங்களில் பெரிய 'எல்இடி' திரைகள் அமைக்கப்பட்டுள்ளன. குற்ற சம்பவங்களை தடுக்க பழநி அடிவாரம், படிப்பாதை, யானைப்பாதை, பேருந்து நிலையம் உள்ளிட்ட இடங்களில் 420 சிசிடிவி கேமராக்கள் பொருத்தி, போலீஸார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

விழாவின் முக்கிய நிகழ்வான பங்குனி உத்திரத் தேரோட்டம் நேற்று (ஏப்.11) மாலை நடைபெற்றபிற்பகல் 1 மணிக்கு மேல் தேரேற்றம் நடைபெறுகிறது. தொடர்ந்து, மாலை 4.30 மணிக்கு மேல் கிரிவீதிகளில் தேரோட்டம் நடைபெற உள்ளது. இதையொட்டி, 2,000 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# சென்னையில் அமித் ஷா- தமிழிசைக்கு நேரில் ஆறுதல்; எஸ். குருமூர்த்தியுடன் ஆலோசனை

சென்னை, ஏப்.12



சென்னை வந்துள்ள பாஜக மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான அமித் ஷா, தமிழிசைசவுந்தரராஜனின் இல்லத்துக்குச் சென்று அவருக்கு நேரில் ஆறுதல் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து துக்ளக் ஆசிரியர் எஸ். குருமூர்த்தியின் இல்லத்துக்குச் சென்று அங்கு தமிழக அரசியல் நிலவரம் தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டார். தொடர்ந்து பல்வேறு கட்சிகளின் தலைவர்களை சந்தித்துப் பேச இருக்கிறார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, 2 நாள் பயணமாக நேற்றிரவு தனி விமானம் மூலம் டெல்லியில் இருந்து சென்னை வந்தார். விமான நிலையத்தில் அவரை மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, நயினார் நாகேந்திரன், எச்.ராஜா, வானதி சீனிவாசன், பொன் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

கிண்டியில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் தங்கிய அமித் ஷா, இன்று (ஏப்.11) காலை சென்னை சாலிகிராமத்தில் உள்ள பாஜக மூத்த தலைவரும் முன்னாள் ஆளுநருமான தமிழிசை சவுந்தரராஜனின் வீட்டுக்குச் சென்றார். தமிழிசையின் தந்தையும் மூத்த காங்கிரஸ் தலைவருமான குமரி அனந்தன் கடநத 9ம் தேதி மறைந்ததை அடுத்து அவருக்கு நேரில் ஆறுதல் தெரிவித்தார். அப்போது, தமிழிசை சவுந்தரராஜனனின் கணவர் உட்பட குடும்ப உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

குருமூர்த்தியுடன் ஆலோசனை.. இதனைத் தொடர்ந்து அவர், மயிலாப்பூரில் உள்ள துக்ளக் ஆசிரியர் எஸ்.குருமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றார். அங்கு, தமிழக அரசியல் நிலவரம் குறித்து அவருடன் அமித் ஷா ஆலோசனை நடத்தினார். அப்போது, அதிமுக உடனான கூட்டணி தொடர்பாகவும், அதிமுக மூத்த தலைவர்களில் ஒருவரான செங்கோட்டையனின் அடுத்த கட்ட அரசியல் நகர்வு தொடர்பாகவும் இருவரும் ஆலோசனை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

வாசன் முதல் இபிஎஸ் வரை.. இந்த சந்திப்பை அடுத்து, அமித் ஷாவை, தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் சந்தித்துப் பேச உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அமித் ஷாவை சந்திக்க ஓ பன்னீர் செல்வம் முயற்சி செய்து வருவதாகவும் இதுவரை அதற்கு அனுமதி வழங்கவில்லை என்றும் தகவல் வெளியாகி உள்ளது. அதேநேரத்தில், எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட அதிமுக தலைவர்களை அமித் ஷா சந்திக்க வாய்ப்பு உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

அடுத்த தலைவர் யார்? பாஜக தலைவர் பதவியில் உள்ள அண்ணாமலை, அதிமுக உடன் கூட்டணி அமைக்க எதிர்ப்பு தெரிவித்து வருவதாகக் கூறப்படுகிறது. எனினும், திமுகவை வீழ்த்த அதிமுக கூட்டணி முக்கியம் என தேசிய தலைமை கூறியதாகவும், அதற்கு அதிமுக உடன் கூட்டணி அமைப்பதானால் தான் தலைவர் பதவியில் தொடர விரும்பவில்லை என்றும் அண்ணாமலை கூறியதாகவும் கூறப்படுகிறது. அவரை சமாதானப்படுத்துவதற்காக கடந்த 2 மாதங்களாக மேற்கொண்ட முயற்சி வெற்றி பெறாததை அடுத்து, புதிய மாநில தலைவரை தேர்வு செய்ய பாஜக முடிவு செய்துள்ளது.

இதனிடையே, பாஜக மாநிலத் தலைவர் மற்றும் தேசிய பொதுக்குழு உறுப்பினர் பதவிகளுக்கு போட்டியிட விரும்புவர்கள், பகல் 2 மணி முதல் மாலை 4 வரை விருப்ப மனுக்களை தாக்கல் செய்யலாம் என்று அக்கட்சியின் மாநில துணைத் தலைவரும், மாநில தேர்தல் அதிகாரியுமான எம்.சக்ரவர்த்தி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "பாஜகவின் அமைப்பு பருவ தேர்தல் இறுதிக் கட்டத்தை நாம் அடைந்துள்ளோம். கிளை தொடங்கி மாவட்டத் தலைவர், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் வரையிலான தேர்தல் முடிந்து தற்பொழுது இறுதியாக மாநிலத் தலைவர் மற்றும் தேசிய பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்தலுக்கான விருப்ப மனுக்கள் வரவேற்கப் படுகிறது.

மேற்கண்ட தேர்தலுக்கான விருப்பமனுக்களை கட்சியின் இணையதளமான www.bjptn.com என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். நாளை (ஏப்.11) வெள்ளிக்கிழமை மதியம் 2 மணி முதல் மாலை 4 மணி வரை போட்டியிட விருப்பமுள்ளவர்கள் விருப்பமனுவை மாநிலத் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார். பாஜகவின் அடுத்த மாநில தலைவராக நயினார் நாகேந்திரன் தேர்வு செய்யப்படுவது ஏறக்குறைய உறுதியாகிவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அதிமுக இணைவது, தொகுதிப் பங்கீடு, தேர்தல் பணிகள் என அனைத்துக்கும் இந்த நகர்வு பொருத்தமாக இருக்கும் என பாஜக மேலிடம் கருதுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சர்ச்சை பேச்சு எதிரொலி! திமுக துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பில் இருந்து பொன்முடி விடுவிப்பு

சென்னை, ஏப்.12

திமுக துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பில் இருந்து பொன்முடி விடுவிக்கப்பட்டுள்ளார். இவர் திருக்கோயிலூர் எம்எல்ஏவாக உள்ளார். அவர் மீது அண்மையில் சொத்துக் குவிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால் அவரது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். உச்ச நீதிமன்றம் தண்டனையை நிறுத்தி வைத்த பின்னர் அவருக்கு மீண்டும் வனத்துறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. இந்நிலையில் அண்மையில் அவர் பெண்களுக்கு எதிராகப் பேசிய பேச்சும், சைவம், வைணவம் பற்றி சர்ச்சைக்குரிய விதத்தில் பேசியதும் அடங்கிய வீடியோ வைரலாகி சர்ச்சையானதால் அவரது கட்சிப் பதவி தற்போது பறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.



இது தொடர்பாக திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி அவர் வகித்து வரும் துணைப் பொதுச்செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பதவி நீக்கத்துக்கான காரணத்தை அந்த அறிக்கையில் குறிப்பிடவில்லை.

### கனிமொழி ட்வீட்...

முன்னதாக திமுக எம்.பி. கனிமொழி (வெள்ளிக்கிழமை) காலை தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "அமைச்சர் பொன்முடியின் சமீபத்திய பேச்சு ஏற்றுக் கொள்ள முடியாதது. எந்த காரணத்திற்காகப் பேசப் பட்டிருந்தாலும் இப்படிப்பட்ட கொச்சையான பேச்சுகள் கண்டிக்கத்தக்கது" என்று குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில், திமுக துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து பொன்முடி விடுவிக்கப் பட்டுள்ளார். இது பொன்முடியின் அரசியல் வாழ்க்கையில் மிகப் பெரிய சறுக்கலாகப் பார்க்கப்படுகிறது.

அடுக்கடுக்கான சர்ச்சைப் பேச்சுக்கள்.. ஏற்கெனவே மகளிர் விடியல் பயணத் திட்டப் பயனாளர்களை ஓசி பேருந்து பயணம், மனு கொடுக்க வந்த பெண்ணிடம் சாதியை சுட்டிக் காட்டிப் பேசியது என்று அமைச்சர் பொன்முடி பேச்சால் எழுந்த சர்ச்சைகள் திமுக அரசுக்கு நெருக்கடியாக அமைந்தன.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அமைச்சர் பொன்முடி பெண்களை இழிவுபடுத்தும் விதத்தில் பேசியதாகத் தெரிகிறது. அந்தப் பேச்சு அடங்கிய வீடியோ நேற்று முதல் சமூகவலைதளங்களில் வைரலாகி வரும் சூழலில் பொன்முடி திமுக துணைப் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவரது அமைச்சர் பதவியும் பறிபோகுமா என்ற சலசலப்புகள் கட்சிக்குள் எழுந்துள்ளன.

### திருச்சி சிவா

திமுக துணைப் பொதுச் செயலாளராக திருச்சி சிவா நியமிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "கழக சட்டதிட்ட விதி: 17 பிரிவு:3 ன்படி கழக கொள்கைப் பரப்புச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் திருச்சி சிவா, எம்.பி.யை, அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, திமுக துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்படுகிறார்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாஜக மாநில தலைவர் பதவிக்கு விருப்பமனு அண்ணாமலை போட்டி இல்லை

சென்னை, ஏப்.12

பாஜக மாநில தலைவர் தேர்தலுக்கு விருப்பமனு தாக்கல் இன்று நடைபெறுகிறது. தமிழக பாஜகவில் மாநில தலைவர் மற்றும் தேசிய செயற்குழு உறுப்பினர் பதவிகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இவ்விரு பதவிகளுக்கு போட்டியிடுபவர்கள் விருப்பமனு தாக்கல் செய்யலாம் என தமிழக பாஜக தேர்தல் அதிகாரி எம்.சக்கரவர்த்தி அறிவித்துள்ளார்.




இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது: மாநில தலைவர் மற்றும் தேசிய செயற்குழு உறுப்பினர் தேர்தலுக்கான விருப்பமனுக்களை கட்சியின் இணையதளமான ஷ்ஷ்ஷ்.தீழ்ஜீமீஸீ.நீஷீனீ என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஏப்.11ம் தேதி வெள்ளிக்கிழமை மதியம் 2 மணி முதல் மாலை 4 மணி வரை போட்டியிட விருப்பமுள்ளவர்கள் விருப்பமனுவை மாநிலத் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மூன்று பருவம் தீவிர உறுப்பினராகவும் மற்றும் குறைந்தது 10 ஆண்டுகள் அடிப்படை உறுப்பினராகவும் உள்ளவர் மாநில தலைவர் பதவிக்கு போட்டியிட தகுதி பெறுவார். இவரை கட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் 10 பேர் அவரிடம் இருந்து எழுத்து பூர்வமாக ஒப்புதல் பெற்று பரிந்துரைக்க வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாநில தலைவருக்கான தேர்தல் நாளை (ஏப்.12ம் தேதி) நடைபெறும் என்றும் 13ம் தேதி முடிவு அறிவிக்கப்பட்டு புதிய தலைவர் பதவியேற்பார் என்றும் இதற்கான ஏற்பாடுகள் சென்னை வானகரத்தில் உள்ள வாரி வெங்கடாசலபதி பேலஸ் மண்டபத்தில் நடைபெற்று வருவதாகவும் பாஜக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாநில தலைவர் பதவிக்கு போட்டியிடுவோர் 10 ஆண்டுகள் அடிப்படை உறுப்பினராக இருக்க வேண்டும் என்று தமிழக பாஜக தகுதி நிர்ணயம் செய்துள்ளது. இதன் காரணமாக, தற்போதைய தலைவர் அண்ணாமலை, அதிமுகவில் இருந்து விலகி பாஜகவில் இணைந்து எம்.எல்.ஏவாக பதவி வகித்து வரும் நயினார் நாகேந்திரன் ஆகியோர் பாஜக மாநிலத் தலைவர் போட்டியில் பங்கேற்க முடியாத சூழல் உருவாகியுள்ளது.

அண்ணாமலை போட்டி இல்லை: கடந்த மாதம் டெல்லி சென்ற அண்ணாமலை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் பாஜக தலைவர்களை சந்தித்து பேசினார். இந்த சந்திப்புக்கு பிறகு, 'மாநில தலைவர் போட்டியில் நான் இல்லை,' என செய்தியாளர்களிடம் திட்டவட்டமாக கூறியிருந்தார். ஆனாலும், பாஜக தொண்டர்கள் அண்ணாமலையை மாநில தலைவர் பதவியில் இருந்து மாற்றக்கூடாது என அவருக்கு தொடர்ந்து ஆதரவு குரல் எழுப்பி வந்தனர்.

அதேவேளையில், நயினார் நாகேந்திரன் டெல்லியிலேயே முகாமிட்டிருந்ததால், அடுத்த மாநில தலைவர் அவர் தான் என பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இந்நிலையில், நேற்று மயிலாப்பூரில் ஆடிட்டர் குருமூர்த்தியை சந்தித்த அண்ணாமலை, அதன்பிறகு, ஒரு தனியார் தொலைக்காட்சியிடம், 'மாநில தலைவர் தேர்தலுக்கான போட்டியில் நான் விருப்பமனு தாக்கல் செய்ய போவதில்லை. போட்டியிட போவதும் இல்லை,' என தெரிவித்துள்ளார். இதன்மூலம், மாநில தலைவருக்கான தேர்தலில் அண்ணாமலை போட்டியில்லை என்பது உறுதியாகி உள்ளது.

# மதுபான ஆலை நிறுவனத்திடம் இருந்து அரசு கையகப்படுத்திய 248 ஏக்கர் நிலத்தை மீட்க நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஏப்.12

சென்னையில் அரசு கையகப்படுத்திய 248 ஏக்கர் நிலத்தில் தனியார் மதுபான ஆலை நிர்வாகம் செயல்படுவது சட்டவிரோதம் என்று தெரிவித்துள்ள உயர் நீதிமன்றம், அந்த நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஏப்ரல் 21ம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளது.



சென்னை வளசரவாக்கம், மதுரவாயல் பகுதியில் மோகன் மதுபான ஆலை நிறுவனத்துக்கு சொந்தமான சுமார் 248 ஏக்கர் நிலத்தை தமிழக அரசு கடந்த 1975ம் ஆண்டு கையகப்படுத்தி உத்தரவிட்டது. இந்த நிலத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பில் புதிய ராமாபுரம் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்ட முடிவு செய்யப்பட்டது.

இதை எதிர்த்து, மதுபான ஆலை நிர்வாகம் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் கடந்த 2017ம் ஆண்டு வழக்கு தொடரப்பட்டது. 'கடந்த 2013ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின்படி ல எங்கள் நிலத்தை அரசு கையகப்படுத்தியது தவறு' என்று அதில் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கை தனி நீதிபதி தள்ளுபடி செய்ததால், உயர் நீதிமன்றத்தில் மதுபான ஆலை நிர்வாகம் மேல்முறையீடு செய்தது. நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், கே.ராஜசேகர் அமர்வில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், ''புதிய ராமாபுரம் திட்டம் கைவிடப்பட்டதால், தற்போது வரை அந்த நிலம் மனுதாரர் நிறுவனத்தின் வசம்தான் உள்ளது. எனவே, நிலத்தை திரும்ப பெற மனுதாரருக்கு முழு உரிமையும் உள்ளது'' என்று வாதிடப்பட்டது.

அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஆர்.ரமன்லால், ''மதுபான ஆலைக்கு சொந்தமான நிலத்தை கடந்த 1975ம் ஆண்டே தமிழக அரசு சட்டரீதியாக கையகப்படுத்தி, வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைத்து விட்டது. அந்த நிலம் அரசுக்கு சொந்தமானது. நிலத்துக்கான இழப்பீடும் சம்பந்தப்பட்ட சிவில் நீதிமன்றத்தில் கடந்த 1986ம் ஆண்டு டெபாசிட் செய்யப்பட்டுவிட்டது.

முறைகேடாக ஆக்கிரமிப்பு: ஆனால், பல கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த நிலத்தை மனுதாரர் நிறுவனம் முறைகேடாக ஆக்கிரமித்துக் கொண்டு தற்போதும் தனது வசம் வைத்துள்ளது. எனவே, தனி நீதிபதியின் உத்தரவை உறுதி செய்து, இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும். அத்துடன், நிலத்தை காலி செய்து கொடுக்கவும் உத்தரவிட வேண்டும்'' என்று வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், ''அரசு கையகப்படுத்திய நிலத்தில் தனியார் மதுபான ஆலை நிர்வாகம் செயல்படுவது சட்டவிரோதம். அந்த நிலத்தை மனுதாரர் நிறுவனத்திடம் இருந்து மீட்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, பொது பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும். இந்த மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. இந்த 248 ஏக்கர் நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஏப்ரல் 21ம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்'' என்று உத்தரவிட்டுள்ளனர்.

மாலை தந்தி

12.04.2025





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி வைகை ஆற்றில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு வைகை ஆற்றை தூய்மைப்படுத்தும் பணி நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி தலைமையில் தூய்மைப்படுத்தும் பூமி பூஜை நேற்று நடைபெற்றது. மதுரையில் நடைபெறும் சித்திரை திருவிழாவிற்கு அடுத்தபடியாக மானாமதுரையில் உள்ள ஆனந்தவல்லிசோமநாதர் கோவிலில் நடைபெறும் சித்திரை திருவிழா மிகவும் புகழ் பெற்றதாகும். இந்த திருவிழாவில் மானாமதுரையை சுற்றியுள்ள ஏராமான கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வந்து வைகையாற்றங்கரையில் தங்கியிருந்து கலந்துகொள்வது வழக்கம். மேலும் இந்த திருவிழா 10 நாட்கள் கோலாகலமாக நடைபெறும்.இந்த நிகழ்ச்சியில் நகர் மன்ற துணைத் தலைவர் பாலசுந்தரம், நகர் மன்ற உறுப்பினர்கள் , நகராட்சி பணியாளர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

# சிவகங்கை :தமிழக வெற்றிக் கழகம் தெற்கு ஒன்றியம் சார்பில் அன்னதானம்



சிவகங்கை ஏப்12

சிவகங்கை ஊராட்சிஒன்றியம் மானாமதுரை சாலையில் உள்ள கீழக்கண்டனி ஊராட்சியில் சிவகங்கை தெற்கு ஒன்றிய தமிழக வெற்றிக்கழகம் சார்பில் கொடிக்கம்பம் நடுதல், தண்ணீர் பந்தல் திறப்பு, அன்னதானம், மாற்று கட்சியில் இருந்து 200 க்கும் மேற்பட்டோர் தவெக வில் இணைப்பு உள்பட நான்கு பெரும் விழாக்கள் நடைபெற்றது.

தமிழக வெற்றிக்கழக தலைவர் தளபதி விஜய் உத்தரவின் படியும் பொதுச் செயலாளர் புஸ்லி ஆனந்த் அறிவுறுதலின் படியும், தெற்கு ஒன்றியச்செயலர் கே.வி. பரமேஸ்வரன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் மாவட்ட செயலாளர் எஸ்.முத்துபாரதி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்.

இதில்,இணை செயலாளர் காளீஸ்வரன், செயற்குழு தாமரை பாண்டியன்நகர செயலாளர் கோபால கிருஷ்ணன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் மற்றும் மகளிர், இளைஞர், மாண வர், தொண்டர், வழக்குரைஞர் அணி நிர்வாகிகள் திரளானோர் கலந்து கொண்டனர்.

# மதுரை மாநகராட்சி "சமத்துவ நாள் உறுதிமொழி" மேயர் இந்திராணி பொன்வசந்த் தலைமையில் ஏற்பு



மதுரை: ஏப் 12

டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 1 4 ஆம் நாளை ஆண்டு தோறும் "சமத்துவ நாள்" ஆக கடைப்பிடிக்க தமிழக அரசு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் "சமத்துவ நாள்" உறுதிமொழி யினை மாண்புமிகு மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் அனைத்து பணியாளர்களும் ஏற்றுக் கொண்டனர்.

சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும், சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்கு முறைகளுக்கு எதிராகவும், தொடர்ந்து போராடி ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும், வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து, எளிய மக்களின் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிய, நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளில், சாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும், சகமனிதர்களைச் சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமாட்டேன் என்றும், சகமனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பேன் என்றும் உளமார உறுதி ஏற்கிறேன் என்று மேயர் வாசிக்க அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இதேபோல் அந்தந்த மண்டலங்களில் உதவி ஆணையாளர்கள் முன்னிலையில் அனைத்து பணியாளர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் உதவி ஆணையாளர் (பணி) அருணாச்சலம், கணக்கு அலுவலர் (பொது) பாலாஜி, கண்காணிப்பாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றிய குழு கூட்டம் ஒன்றிய பெருந்தலைவர் உதயா கருணாகரன் தலைமை தாங்கினார் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மாலதி சசிகலா ஒன்றிய துணைத் தலைவர் ஏவிஎம் இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் மேலும் இந்த கூட்டத்தில் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட அனைத்து ஒன்றிய குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இந்த ஒன்றிய குழு கூட்டத்தில் வரவு செலவு குடிநீர் தெரு விளக்கு சாலை இதில் கலந்துகொண்ட ஒன்றிய குழு உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் மேம்படுத்தப்படக்கூடிய சாலை வசதிகள் மற்றும் குடிநீர் தெரு விளக்கு குறித்தும் பேசினார்கள்..

# உருவாட்டி பெரியநாயகி அம்மன் கோயில் பங்குனி திருவிழா தேரோட்ட திருவிழாவில் ஆயிரக்கணக்கானர் பங்கேற்பு

காளையார் கோவில் ஏப்12

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் அருகேயுள்ள உருவாட்டி கிராமத்தில் பெரியநாயகி அம்மன் கோயில் உள்ளது இக் கோயில் சிவகங்கை தேவஸ்தானத்திற்கு உட்பட்டது மேலும் இக்கோவில் மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தது. காளையார் கோவில் சுற்றுவட்டார பகுதியில் பிரசித்தி பெற்ற இக்கோவிலில் பங்குனி திருவிழா கடந்த ஏப் 2 ல் கொடியேற்றத்துடன் தொடங்கியது

அதனை தொடர்ந்து அம்மனுக்கு காப்பு கட்டியதும், பக்தர்கள் விரதத்தை தொடங்குவார்கள் மயில், பறவை காவடிகளும், தீச்சட்டி எடுத்தும், பூக்குழி இறங்கியும் பக்தர்கள் நேர்த்தி கடனை செலுத்தி வந்தி வந்தனர். பங்குனி திருவிழாவை முன்னிட்டு தினமும் சுவாமி பல்வேறு வாகனங்களில் திருவீதி உலா வந்தது.



விழாவின் முக்கிய நிகழ்வாக ஏப்10 ம் தேதி காலை 10 மணியளவில் அலங்கரிக்கப் பட்ட தேரில் பெரியநாயகி அம்மன் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார். பின்னர் அம்மனுக்கு சிறப்பு ஆராதனை அபிஷேகம் நடைபெற்றது. .உருவாட்டி அதனை சுற்றியுள்ள கிராம மக்கள் ஏராளமானோர் தேரோட்டத்தில் பங்கேற்று தேர் வடம் பிடித்து இழுக்க, நான்கு ரத வீதிகளில் தேரோட்டம் நடைபெற்றது.

விழா ஏற்பாட்டை சிவகங்கை தேவஸ்தான அறங்காவலர் ராணி மதுராந்தகி நாச்சியார் ,மேலாளர் இளங்கோ உள்ளிட்டோர் மற்றும் கிராமத்தினர் விழாவுக்கான ஏற்பாடுகளை செய்தனர். நிகழ்ச்சியின் நிறைவாக நாளை ஏப்11 ம் தேதி இரவு 7:00 மணிக்கு கோயிலில் அம்மன் பூப்பல்லக்கில் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

# திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய பகுதிகளில், முடிவுற்ற வளர்ச்சி திட்டப்பணிகளை பயன்பாட்டிற்கு திறந்து வைத்த அமைச்சர்

திருப்பத்தூர் ஏப்12

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கல்லல் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் முடிவுற்ற வளர்ச்சி திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து தெரிவிக்கையில்,











தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளில் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையிலான பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவது மட்டுமன்றி, தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சி பணிகளும் துரிதமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், சீரான வளர்ச்சியையும், சமூக நீதியையும், ஜனநாயகத்தையும் தனது குறிக்கோளாக கொண்டு மக்கள் பணியாற்றிய பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு அனைத்துதுறைகளிலும்சிறந்து விளங்கி வருகிறது.

குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சரின் ஆக்கப்பூர்வமாக தமிழகத்தில் செயல் படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள், பிற மாநிலங்கள் மட்டுமன்றி, பிற நாடுகளுக்கும் முன்மாதிரியாக திகழ்ந்து வருகிறது. அதில், கல்வி மற்றும் சுகாதாரம் தனது இரு கண்களாக கொண்டு, அதற்கென அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து, சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். நடப்பு நிதியாண்டில் பள்ளிக்கல்விக்கென ரூ.49 ஆயிரம் கோடியும், உயர்கல்விக்கென ரூ.09 ஆயிரம் கோடியும் என மொத்தம் ரூ.58 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்துள்ளது குறிப்பிடதக்கதாகும்.

மேலும், அரசுடன் இணைந்து பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் நன்கொடையாளர்கள் அரசிற்கு உறுதுணையாக இருந்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இன்றையதினம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீழபட்டமங்கலம் ஊராட்சியிலுள்ள ரெ.வள்ளியம்மை ஆச்சி அரசு உயர்நிலைப்பள்ளியில் 265 மாணவ மாணவியர்களுக்கு விளையாட்டு சீருடைகளை இப்பகுதியைச் சார்ந்த அமுதா மற்றும் அவர்களது மகன் ரமேஷ் அவர்கள் ஆகியோர் வழங்கிட முன்வந்து, மாணாக்கர்களுக்கு விளையாட்டு சீருடைகள் வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. மேற்கண்ட நன்கொடையாளர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இப்பள்ளியில் மாணாக்கர்களுக்கு மேஜைகள் மற்றும் நாற்காலிகளின் தேவைகள் குறித்து தலைமையாசிரியர் அவர்கள் கோரிக்கையாக எடுத்துரைத்துள்ளார். அக்கோரிக்கையும் நிறைவேற்றிடும் வகையில், இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகிய எனது நிதியின் கீழும் அல்லது எனது சொந்த நிதியின் கீழும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறினார்

சிவகங்கை மாவட்டத்தின் கடைகோடி பகுதியில் வசிக்கும் மக்களின் தேவைகள் அறிந்து அவர்களின் கோரிக்கைகளுக்கு முன்பாகவே, அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பல்வேறு வளர்ச்சி பணிகள் மாவட்டம் முழுவதும் மேம்படுத்தப்பட்டு, அதனடிப்படையில், மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழும் மேற்கொள்ளப்பட்டுள்ள முடிவுற்ற திட்டப்பணிகள் அனைத்தும் பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கல்லல் ஊராட்சி ஒன்றியம், சிராவயல் ஊராட்சி, கிளாமடம் கிராமத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.49.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடமும், குன்றக்குடி ஊராட்சிக்குட்பட்ட மயிலாடும்பாறை தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.09.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலையரங்கமும், தட்டட்டி ஊராட்சிக்குட்பட்ட கொரட்டி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதிமேம்பாட்டு நிதியின் கீழ் மஞ்சுவிரட்டு திடலில் ரூ.07.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விருந்தினர் மேடையும், இளங்குடி ஊராட்சிக்குட்பட்ட கருகுடி கிராமத்தில் ஒன்றிய பொது நிதியின் கீழ் ரூ.06.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உணவு அருந்தும் கூடம் என ஆக மொத்தம் ரூ.72.30 இலட்சம் மதிப்பீட்டிலான 04 வளர்ச்சி திட்டப்பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதில், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிராவயல் ஊராட்சி பகுதிகளில் மொத்தம் 138 வளர்ச்சி திட்டப்பணிகள் ரூ.09.70 கோடி மதிப்பீட்டிலும், குன்றக்குடி ஊராட்சி பகுதிகளில் மொத்தம் 119 வளர்ச்சி திட்டப் பணிகள் ரூ.06.34 கோடி மதிப்பீட்டிலும், இதேபோன்று, இளங்குடி ஊராட்சி பகுதிகளில் மொத்தம் 117 வளர்ச்சி திட்டப் பணிகள் ரூ.02.17 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபோன்று, பொதுமக்களின் தேவை அறிந்து திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் கூடுதல் தேவைகள் இருப்பின், என்னிடமோ அல்லது சம்மந்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வாயிலாகவே எடுத்துரைப்பதன் அடிப்படையில், அக்கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா.வானதி, கல்லல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இரத்தினவேல் மற்றும் மகாலிங்கம், திருப்பத்தூர் வட்டாட்சியர் மாணிக்கவாசகம் மற்றும் ஊர் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தேவகோட்டை அருகே நாட்டாளம்மன் திருக்கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா



தேவகோட்டை ஏப்12

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகே மேல செம்பொன்மாரிகிராமத்தில் அமைந்துள்ள நாட்டாளம்மன் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா குலதெய்வ வழிபாடு செய்பவர்களால் வெகு விமர்சையாக நடைபெற்றது

முன்னதாக யாகசாலை வேள்வி அமைத்து விட்டது அனுக்ஞ் பூஜை விக்னேஸ்வர பூஜை கணபதி ஹோமம் நவகிரக ஹோமம் வாஸ்து சாந்தி அங்கு ஊரார் பணம் மற்றும் பூர்ணாகுதி உள்ளிட்ட பூஜைகளை தொடர்ந்து யாகசாலையில் பூஜிக்கப்பட்ட புனித நீரை சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கும்ப கலசத்தை கொண்டு சென்று புனித நீரை ஊற்றி அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் ராட்சதன் மூலம் புனித நீர் பொதுமக்களுக்கு தெளித்தனர் குலதெய்வ வழிபாடு செய்பவர்கள் சுற்றுவட்டார கிராம மக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் பெருஞ்சாந்தி பெருவிழா





தேனி ஏப்12

தேனிமாவட்டம் சின்னமனூர் ஃபாரஸ்ட் ரோடு அருகே அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன மஹா கும்பாபி ஷேகம் மற்றும் விசேஷ பூஜைகளுடன் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தில் அபிஷேகமும் தீபாராதனையும் பிரசாதமும் வழங்கப்பட்டது. அதுசமயம் அருள்மிகு ஸ்ரீ பாலமுருகன், ஸ்ரீ ஐயப்பன், ஸ்ரீ வெள்ளையம்மாள், ஸ்ரீ பொம்மியம்மாள் சமேத ஸ்ரீ மதுரை வீரன் சுவாமி, ஸ்ரீ முனீஸ்வரர், ஸ்ரீ நாகம்மாள், ஸ்ரீ சப்த கன்னிமார்கள் ஆகிய தெய்வங்களுக்கு பூஜைகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்குமேல் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. திருக்கோயில் திருப்பணித்தாரர் பால்வண்ணன் ஈஸ்வரி, .பாரத், வர்ஷா மற்றும் பாரத் குரூப், உறவினர்கள் நண்பர்கள் மற்றும் கிராம பொதுமக்களும் பக்தகோடி மெய்யன்பர்களும் விழாவில் கலந்து கொண்டு ஸ்ரீ செல்வ விநாயகரின் அருளை பெற்றுச் சென்றனர்.





சென்னை சென்ட்ரல் மற்றும் பூந்தமல்லி ரயில் நிலையங்களுக்கு நேற்று வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மர்ம நபர் காவல் துறையினர் தேடி வருகின்றனர் இந்நிலையில் மானாமதுரை இருப்புப் பாதை காவல் சார்பு ஆய்வாளர் தனுஷ்கோடி தலைமையில் தனிப்பிரிவு சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜா மற்றும் ரயில்வே பாதுகாப்பு படையினர் ஒருங்கிணைந்து ரயில் நிலையத்தில் உள்ள இருசக்கர வாகனம் காப்பகம் ,ஆட்டோ, ரயில்வே ஸ்டேஷன், ரயில் பெட்டியில் வெடிகுண்டு சோதனை நடத்தினர்.

## பழனியில் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக ஒரு நாள் முழுவதும் அன்னதானம் வழங்கல்



பழனி ஏப்12

திண்டுக்கல் மாவட்டம் பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு பாளையம் அருகே மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா ஆணைக்கிணங்க மற்றும் கழக இணைச் செயலாளர் விஜய் சிவா மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன். ஆகியோர் ஏற்பாட்டில் பழனி பாதயாத்திரை வரும் பக்தர்களுக்கு நீர் மோர்.அன்னதானமும். ஒரு நாள் முழுவதும் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது இவ்விழாவில் நகரச் செயலாளர் மிதுன். மாவட்ட நிர்வாகிகள் நகர நிர்வாகிகள் சார்பணி நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர் இந்நிகழ்வில் தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பில் விழா ஏற்பாட்டினை செய்திருந்த மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் அனைத்து இடங்களிலும் வெற்றி பெற வேண்டும். தமிழக வெற்றி கழகத்தின் நிறுவனத் தலைவர் விஜய் நீண்ட ஆரோக்கியத்துடனும் இருக்க வேண்டும் பாதயாத்திரை வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி வருகிறோம் எனக் கூறினார்.

## ஒட்டன்சத்திரத்தில் புனரமைக்கப்பட்ட சட்டமன்ற அலுவலகத்தை ஊரக வளர்ச்சிதுறை திறந்து வைத்த அமைச்சர்



திண்டுக்கல் ஏப் 11

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரத்தில் இ சேவை மையத்துடன் கூடிய புனரமைக்கப்பட்ட புதிய சட்டமன்ற அலுவலகத்தை ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.





இந்நிகழ்ச்சியில் உணவு- உணவுபொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலை வகித்தார்.மேலும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், பழனி கோட்டாட்சியர் ஆர். சக்திவேல், ஒட்டன் சத்திரம் நகராட்சி ஆணையாளர் ஸ்வேதா, ஒட்டன் சத்திரம் வட்டாட்சியர் பழனிச்சாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமராஜ், வடிவேல் முருகன்,ஒட்டன் சத்திரம் நகர் மன்ற தலைவர் க.திருமலைச்சாமி,துணை தலைவர் ப.வெள்ளைச்சாமி, மாவட்ட அவைத் தலைவர் தி.மோகன்,மத்திய கூட்டுறவு சங்க தலைவர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர்கள் இரா.ஜோதீஸ்வரன்,க. தர்மராஜ், எஸ்.ஆர்.கே.பாலு ஒன்றிய அவைத்தலைவர் செல்வராஜ் ,நகர அவைத் தலைவர் சோமசுந்தரம், ஒன்றிய துணை செயலாளர்கள், முருகானந்தம், ராமசாமி,சிவா, உள்ளிட்ட முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## மீன்பிடி உரிமையினை 5 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்பு! திண்டுக்கல் ஆட்சியர் அறிவிப்பு

திண்டுக்கல் ஏப்12

திண்டுக்கல் மாவட்டம் மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை கட்டுப்பாட்டிலுள்ள பரப்பலாறு, சின்ன பெரியகோம்பை மற்றும் குதிரையாறு நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமையினை 5 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விட ஒப்பந்தப்புள்ளிகள் 07.04.2025 முதல் 21.04.2025 பிற்பகல் 02.00 மணிவரை வரவேற்கப்படுகின்றன.



ஒப்பந்தப்புள்ளி திறப்பு 21.04.2025 அன்று பிற்பகல் 03.00 மணியளவில் சென்னை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அலுவலகத்தில் நடைபெறும். ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் கூடுதல் விவரங்களுக்கு www.tntenders.gov.in என்னும் இணைய தள முகவரியில் காணலாம்.

தெளிவுரைகள் மற்றும் விளக்கங்களுக்கு திண்டுக்கல் மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். ஏல அறிவிப்பில் மாற்றங்கள் ஏதேனுமிருப்பின் மேற்காணும் இணையதளம் மூலமாக மட்டுமே அறிவிக்கப்படும்.

மேலும், விபரங்களுக்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, உதவி இயக்குநர் அலுவலகம் 80 அடி ரோடு, நேருஜி நகர், திண்டுக்கல் - 624 001 என்ற முகவரியிலும் 0451 - 2900148 என்ற அலுவலக தொலைபேசி எண் மற்றும் 9384824535 என்ற கைபேசி எண்ணையும் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் செ.சரவணன், தெரிவித்துள்ளார்.

## தென்காசி கடையநல்லூரில் ஐக்கிய ஜமாத் சார்பில் புதிய வக்பு திருத்த சட்டத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம்



கடையநல்லூர் ஏப் 12

தென்காசி மாவட்டம் முழுவதும் முஸ்லிம்கள் சமீபத்தில் மத்திய அரசு கொண்டு வந்துள்ள வக்பு திருத்தச் சட்டத்தை வாபஸ் பெற வலியுறுத்தி தென்காசி மாவட்டம் தென்காசி, செங்கோட்டை, வடகரை, அச்சன்புதூர், வாவா நகரம், பண்பொழி, புளியங்குடி, வாசுதேவநல்லூர் ,வீரணம், சுரண்டை ,வி. கே .புதூர் , சங்கரன்கோவில், ரவணசமுத்திரம், ஆகிய பகுதிகளில் உள்ள 400க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகை முடிந்தவுடன் தொழுகையில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் கருப்பு பேஜ் அணிந்து அமைதியான முறையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அந்தந்த பள்ளிவாசலினுடைய ஜமாஅத் தலைவர் தலைமை தாங்கினார் நிர்வாகிகள் முன்னிலை வைத்தனர் பள்ளிவாசல்களின் தலைமை இமாம்கள் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தனர். கடையநல்லூரில் பேட்டை, மக்கா நகர், மதீனா நகர், ரஹ்மானியாபுரம், இக்பால் நகர், மாவடிகால், நடு அய்யாபுரம், மெஹராஜ் நகர்உட்பட கடையநல்லூர் 40க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் ஏராளமான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர்..

## தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஆதார விலையில் பச்சைப்பயறு உளுந்து கொள்முதல்! திருப்பூர் ஆட்சியர் தகவல்

திருப்பூர் ஏப்12

திருப்பூர் மாவட்டம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திடவும், அவர்களின் வருவாயினை பெருக்கிடவும், தமிழக அரசு பல்வேறு உழவர் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில், பச்சைப்பயறு மற்றும் உளுந்து சாகுபடி செய்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் அவர்கள் விளைவித்த பச்சைப்பயறு மற்றும் உளுந்து ஆகியனவற்றை மத்திய அரசின் தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை (National Agricultural Co-operative Marketing Federation) இணையத்தின் மூலம், விலை ஆதரவு திட்டத்தின் கீழ், குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி, திருப்பூர் மாவட்டத்தில் முறையே 10



மெ.டன் மற்றும் 350 மெ.டன் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் முதன்மை கொள்முதல் நிலையமாக செயல்பட உத்தரவிடப்பட்டுள்ளது. இம்மையத்தில் நியாயமான சராசரி தரத்திற்கு கிலோ ஒன்றுக்கு பச்சைப்பயறு ரூ.86.82 மற்றும் உளுந்து ரூ.74.00 என்ற விலைக்கு 2025 ஆம் ஆண்டில் 15.03.2025 முதல் 12.06.2025 முடிய கொள்முதல் செய்யப்படவுள்ளது. மேலும், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பச்சைப்பயறு மற்றும் உளுந்து ஆகியனவற்றிற்கான கிரையத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படும்.

இத்திட்டத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படவுள்ள பச்சைப்பயறு மற்றும் உளுந்து கீழ்காணும் விவரப்படி நியாயமான சராசரி தரத்தினை (Fair Average Quality) கொண்டிருத்தல் வேண்டும்.

1. அயல் பொருட்கள் கலப்பு, 2%, 2. இதர தானியங்கள் கலப்பு 3%, 3. சேதமடைந்த பருப்புகள் 3%,4.சிறிதளவு சேதமடைந்த பருப்புகள், 4%, 5. முதிர்வடையாத மற்றும் சுருங்கிய பருப்புகள் 3%, 6. வண்டுகள் தாக்கிய பருப்புகள் 4%, 7.ஈரப்பதம் 12% இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள், சிட்டா, அடங்கல், ஆதார் எண், மற்றும் வங்கி கணக்கு எண் ஆகிய விவரங்களுடன் உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் (கைபேசி எண்: 9443962834), முன்பதிவு செய்துகொள்ள கேட்டுகொள்ளப்படுகிறது.

எனவே, பச்சைப்பயறு மற்றும் உளுந்து சாகுபடி செய்துள்ள திருப்பூர் மாவட்ட அனைத்து விவசாயிகளும் இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு தங்களது விளைபொருளுக்கு அதிக விலை பெற்று பயன்பெற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார். மேலும் விவரங்களுக்கு முதுநிலை செயலாளர் / வேளாண்மை துணை இயக்குநர், திருப்பூர் விற்பனைக்குழு, திருப்பூர் ( 04212213304 மற்றும் கைபேசி எண்: 8667543113) அவர்களை தொடர்புகொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.



திருப்பூர் மாநகராட்சி மாநகர மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் தூய்மை பணியாளர்களை தொழில் முனைவோராக மாற்றும் திட்டத்தின் மூலம் மாநகராட்சி பணிகளுக்காக கழிவு நீர் அகற்றும் 6,000லிட்டர் கொள்ளளவு கொண்ட வாகனத்தை கொடியசைத்து துவக்கிவைத்தார். உடன் துணை ஆணையாளர் சுந்தர்ராஜன், 2வது மண்டல தலைவர் தம்பிகோவிந்தராஜ், மாநகராட்சி அலுவலர்கள்,நிதி வழங்கும் வங்கி அதிகாரிகள் உட்பட பலர்உள்ளனர்.




தேனி மாவட்டம் வீரபாண்டி அருகே உள்ள கோடாங்கி பட்டியில் ஸ்ரீ காளியம்மன் கோவில் பங்குனி உற்சவ திருவிழாவில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தேனி கிழக்கு மாவட்டம் தேனி ஒன்றிய செயலாளர் ராஜதுரை தலைமையில் ஊர்வலமாக வந்த பக்தர்களுக்கு நீர்மோர் வழங்கப்பட்டது.




டாஸ்மாக் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு மதுரை மாவட்டம் சார்பில் பணி நிரந்தரம் காலமுறை ஊதியம் பணியாளர்களுக்கு முறையான நிலையானை அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் போன்ற பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை நடப்பு சட்டமன்ற கூட்டத்தொடரில் நிறைவேற்றுத் தர வலியுறுத்தி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம், மாநில பொதுச் செயலாளர் பாலமுருகன் தலைமையில் மாநிலத் துணைத் தலைவர் ராமர் முன்னிலையில் நடைபெற்றது. டாஸ்மாக் தமிழ்நாடு அரசு பேரூராட்சி பணியாளர்கள் சங்கத்தின் மாநில தலைவர் பிச்சைமுத்து சிறப்புரை நிகழ்த்தினார். மற்றும் அருண்குமார், கனகராஜ், விர்மன், ராமச்சந்திரன், மாநில பொதுச் செயலாளர் பாண்டியன் மற்றும் மண்டலத் தலைவர் அருண்குமார் நாகராஜ் அங்குவேல் பிரபு தவசி பாண்டி ராஜா நாகராஜன் உட்பட ஏராளமானவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# சோழவந்தானில் திமுக சார்பில் நீர் மோர் பந்தல் வெங்கடேசன் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார்




சோழவந்தான் ஏப்.12

மதுரை மாவட்டம் சோழவந்தானில் கோடை வெப்பத்தை தணிக்கும் வகையில் திமுக சார்பில் நீர் மோர் பந்தல் திறக்கப்பட்டு நீர் மோர் சர்பத் இளநீர் தர்பூசணி பப்பாளி வெள்ளரி போன்ற கோடை கால குளிர்பானங்கள் பழங்கள் பொது மக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சோழவந்தான் வெங்கடேசன் எம் எல் ஏ கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை தொடங்கி வைத்தார் வாடிப்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் பசும்பொன்மாறன் பேரூராட்சித் தலைவர் எஸ் எஸ் கே ஜெயராமன் பேரூர் செயலாளர் வழக்கறிஞர் சத்திய பிரகாஷ் துணைத் தலைவர் லதா கண்ணன் பொதுக்குழு உறுப்பினர் ஸ்ரீதர் இளைஞர் அணி வெற்றிச்செல்வன்பேரூர் துணைச் செயலாளர் ஸ்டாலின்வார்டு கவுன்சிலர்கள் கொத்தாலம் செந்தில் வேல் குருசாமி முத்துச்செல்வி சதீஷ் சிவா செல்வராணி பிற்பட்டோர் நல வாரிய உறுப்பினர் பேட்டை பெரியசாமி முன்னாள் பேரூர் செயலாளர் முனியாண்டி அவைத் தலைவர் தீர்த்தம் என்ற ராமன் கேபிள் ராஜாமாணவரணி எஸ் ஆர் சரவணன் வார்டு பிரதிநிதி சங்கங்கோட்டை சந்திரன் ரவி ராமநாதன் கண்ணதாசன் பொருளாளர் எஸ் எம் பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்



மதுரை சித்திரை திருவிழா முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா தலைமையில் நடைபெற்றது. மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அர்விந்த் ஆகியோர் உடன் உள்ளனர்.

## கரூரில் வக்பு வாரிய திருத்த சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தி விசிக ஆர்ப்பாட்டம்



கரூர், ஏப்.12

கரூரில், வக்பு வாரிய திருத்த சட்டத்தை திரும்ப பெற வி சி க கண்டன ஆர்ப்பாட்டம். கரூர் தலைமை தபால் நிலையம் முன்பு, கரூர் மாவட்ட ஒருங்கிணைந்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வக்பு வாரிய சட்டத்தை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கரூர் மாநகர மாவட்ட செயலாளர் கராத்தே இளங்கோவன், மேற்கு மாவட்ட செயலாளர் புகழேந்தி, கிழக்கு மாவட்ட செயலாளர் குறிச்சி சக்திவேல் என்கிற ஆற்றல் அரசு, கரூர் மேலிட பொறுப்பாளர் தங்கதுரை உள்ளிட்ட மாவட்ட அளவிலான கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் வக்பு வாரிய சட்டத்தை நிறைவேற்றியதை திரும்ப பெற வலியுறுத்தியும், மத்திய பாஜக அரசை கண்டித்தும் கட்டண கோஷங்களை எழுப்பினர்.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள தாதக்கவுண்டன்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துகருப்பணசாமி ஸ்ரீ கன்னிமார்சுவாமி பங்குனி திருவிழா நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை கிராம பொதுமக்கள் செய்து இருந்தனர்.



தேனி மாவட்டம் உத்தமபாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் சுந்தரபாண்டியன் தலைமையில் சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் சமத்துவ நாள் குறித்து சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும் பெயரால் நடக்கும் சமூக அடக்கம் முறைகளுக்கு எதிராகவும் தொடர்ந்து போராடி ஒதுக்கப்பட்ட அவர்களுடைய உரிமைக்காகவும் ஒடுக்கப்பட்டவர்களுடைய சமுதாயத்திற்காகவும் வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து ஏழை எளிய மக்களின் உரிமைகளை பற்றி விழிப்புணர்வை ஊட்டிய நம் அரசியல் அமைப்பு சட்டத்தை வகுத்து தந்து அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய பிறந்த நாளில் சாதி வேறுபாடுகள் எதுவும் இன்றி சமத்துவத்தையும் சகோதரத்துவையும் அமைக்கும் விதமாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம் என உறுதிமொழி எடுத்தனர்

கம்பம் நகர்




கம்பம் நகர ஐக்கிய ஜமாத் சார்பில் வெள்ளிக்கிழமை சிறப்பு தொழுகை முடிந்த பின் அங்கிருந்து ஊர்வலமாக பழைய தபால் நிலையம் முன்பு ஒன்று கூடினர் ஜமாத் தலைவர் ஜெயினுலாபுதீன் தலைமையில் மத்திய அரசை கண்டித்தும் வக்பு சட்ட மசோதாவை திரும்ப பெற கோரியும் கோசமிட்டனர். ஆர்ப்பாட்டத்தில் கம்பம் நகரில் உள்ள ஐந்துக்கு மேலான பள்ளிவாசல் ஜமாத் இஸ்லாமிய தலைவர்களும் 1000க்கும் மேலான இஸ்லாமிய மக்களும் கலந்து கொண்டனர். பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல் துறையினர் செய்து இருந்தனர்.

## நாகையில் குற்ற வழக்குகளில் கைப்பற்றப்பட்டுள்ள வாகனங்கள் பொது ஏலம்

நாகப்பட்டினம், ஏப்.13



நாகை மாவட்டத்தில் மது விலக்கு குற்ற வழக்குகளில் கைப்பற்றப்பட்டுள்ள 131 வாகனங்கள் வெளிப் பாளையம் காவல் நிலைய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. வருகின்ற 14 ந்தேதி அன்று காலை 08.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை வாகனங்களை நேரில் பார்வையிட்டு கொள்ளலாம்.

வருகின்ற 15 ந் தேதி காலை 10.00 மணி முதல் வாகனங்கள் பொது ஏலத்தில் விடப்படும். அன்றைய தினத்தில் ஏலம் எடுக்க விரும்புவர்கள் ஆதார் அட்டை அல்லது வாக்காளர் அடையாள அட்டையுடன் நேரில் ஆஜராகி தங்களது பெயர் விலாசத்தினை காலை 08.00 முதல் 09.00 மணிக்குள் பழைய வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் வாகனம் ஏலம் விடும் குழுவிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும். பொது ஏலம் மூலம் அதிக விலை கோரும் நபர்களுக்கு வாகனங்கள் வழங்கப்படும். மேலும் ஏலம் எடுத்த வாகனங்களுக்கான தொகையினை உடனுக்குடன் செலுத்தி வாகனங்களை பெற்றுக் கொள்ளவேண்டும். மேலும் விபரம் அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்:

0436524743 மேற்கண்ட தகவலை போலீஸ் சூப்ரண்ட் ஏ.கே. அருண் கபிலன் தெரிவித்துள்ளார்.

# காசநோய் இல்லாத பஞ்சாயத்துக்கள்-காசநோய் சிகிச்சை அளிப்பதில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய அரசு, தனியார் மருத்துவர்களுக்கு சான்றிதழ்கள் கேடயம்

சிவகங்கை ஏப்12

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் உலக காசநோய் தின அனுசரிப்பு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சயர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஆட்சியர் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் உடல் நலத்தினை பேணிக்காத்திடும் பொருட்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி, பொதுமக்களின் நலன் காத்து வருகிறார்கள். அதனடிப்படையில், காசநோய் ஒழிப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு, பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தமிழகம் முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, உலக காசநோய் தினமாக மார்ச் 24ஐ முன்னிட்டு, மாநிலம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2025க்குள் காசநோய் இல்லாத தமிழகமாக மாற்றுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் இலக்கு நிர்ணயித்து, பல்வேறு விழிப்புணர்வுநடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பள்ளியில் உள்ள ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் இது குறித்து போதிய விழிப்புணர்வுடன் இருந்து தங்களை சார்ந்தவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும்.




காசநோய் உள்ளவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளதால் அதிக ஊட்டச்சத்து உணவினை எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு அரசால் மாதாந்திர உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. இதுதவிர, தன்னார்வலர்களும் தங்களது பங்களிப்பை ஏற்படுத்திடும் வகையில், அரசுடன் இணைந்து சிறப்பாக செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்.

சிவகங்கை மாவட்டத்தில் 51 காசநோய் கண்டறியும் நுண்ணோக்கி மையங்கள் உள்ளன. மேலும், 08 புதிய பன் மருந்து எதிர்ப்பு காசநோய் கண்டறியும் கருவிகள் மாவட்டத்தில் பல்வேறு அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொதுமக்களின் உபயோகத்திற்கென தற்போது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நான்காண்டுகளில் 15,295 சளிப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் கண்டறியப்பட்ட 6,298 காசநோயாளிகளில் 5,942 நோயாளிகள் சிகிச்சை பெற்று, முழுமையாக குணமடைந்துள்ளனர். காசநோய் கண்டறியும் நடமாடும் எக்ஸ்ரே வாகனம் ஒன்றும் நமது மாவட்டத்திற்கு கடந்த ஜூலை'2022 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் வழங்கப்பட்டு தற்போது பொதுமக்களின் பயன்பாட்டிற்கு செயல்பாட்டில் உள்ளது.

மேலும், "நிகைஷ போஷன் யோஜனா" திட்டத்தின் கீழ் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகிற காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து உதவியாக மாதம் ரூ.1,000/ வீதம் சிகிச்சை பெறும் காலத்தில் 6,278 நோயாளிகளுக்கு ரூ.1,56,95,000/ மதிப்பீட்டில் அவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி காசநோயாளிகளில் மிகுந்த பாதிப்புக்குள்ளான நோயாளிகளை தத்தெடுத்து அவர்களின் சிகிச்சைக் காலம் முழுவதும் அவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து உணவுப் பொருட்கள் வழங்கிடும் வகையில் "நிகைஷ மித்ரா" எனும் கொடையாளர்கள் கண்டறியப்பட்டு அவர்களின் மூலம் காசநோயாளிகளுக்கு சிகிச்சை காலம் முழுவதும் சத்துள்ள உணவுப்பொருட்களும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பொதுமக்களின் ஒத்துழைப்பின் அடிப்படையில் காசநோயினை முற்றிலுமாக ஒழித்திடும் பொருட்டு, அனைத்துத்துறையைச் சார்ந்த அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி, காசநோய் இல்லாத மாவட்டமாக சிவகங்கை மாவட்டத்தினை உருவாக்குவதற்கான பணிகளை சிறப்பாகவும், துரிதமாகவும் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சயர் ஆஷா அஜித், தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, உலக காசநோய் தினத்தை முன்னிட்டு காசநோய் இல்லாத பஞ்சாயத்துக்கள் மற்றும் காசநோய் சிகிச்சை அளிப்பதில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய அரசு, தனியார் மருத்துவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.தர்மர், துணை இயக்குநர்கள் மரு.வெள்ளசாமி (காசநோய்), மரு.எஸ்.கவிதாராணி (தொழுநோய்), மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ்.மீனாட்சி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கேசவதாசன், நலக்கல்வியாளர் கே.வெள்ளைச்சாமி மற்றும் மற்றும் மருத்துவத்துறையைச் சார்ந்த மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161